கணபதி துணை
திருச்சிற்றம்பலம்.



சிவபூசைத் திரட்டு

வெளியிட்டோர்:

சைவ சித்தாந்த சபையார்

தெற்காடி வீதி
ஸ்ரீமீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோவில்
மதுரை-1.

வெளியீடு எண் 5]   [விலை காசு 50

உ

பொன் மொழி


"யாதாயினும் ஒரு சமயத்தை மெய்யென்று நம்பு கிறவன் அந்தச் சமயத்தின் வழி ஒழுகும் ஒழுக்கம் இல்லாதபொழுது பயன் பெறான். அந்தச் சமயத்துக்கு உரிய கடவுள் இவரென்பதும், அவருடைய இலக்கணங் களும் அவரால் விதிக்கப்பட்ட புண்ணியங்களும், விலக் கப்பட்ட பாவங்களும், அந்தப் புண்ணி பாவங்களின் பலன்களாகிய சுகதுக்கங்களும் அவரை வழிபடும் முறைமையும், அந்த வழி பாட்டினாலே பெறப்படும். பிரயோசனமும், ஆகிய இவைகளை அறியும் அறிவு உதியாத பொழுது, அந்த ஒழுக்கம் உண்டாகாது. சற் குருமுகமாக விதிப்படி பெறப்படுஞ் சமய நூற் கல்வி கேள்விகள் இல்லாதபொழுது அந்த அறிவு உதியாது ஆதலால், கல்வியும் அறிவும் ஒழுக்கமுமாகிய இந்த மூன்றும் வேண்டும். இது எல்லாச் சமயத்தாருக்கும் ஒத்த துணிவு.

எல்லாத் தருமங்களையும் அறிந்து விதிப்படி சிரத்தையுடனே செய்து பயன் பெறுதற்குச் சமய நூலுணர்ச்சியே ஏதுவாதலால் அப்படிப்பட்ட சமய நூலுணர்ச்சியை வளர்த்தலாகிய இந்தத் தருமமே எல்லாத் தருமங்களிலும் மிக மேலானது என்பதும் எல்லாத் தருமங்களுக்கும் மூலம் என்பதும். சொல்ல வேண்டுமா! தேவாலயந்தோறும் சனங்களுக்குச் சைவ சமயத்தை தேச பாஷைகளிலே போதித்தல் வேண்டும் என்று காமிகாகமத்திலே சிவபெருமானால் விதிக்கப் பட்டிருக்கின்றது"

— ஸ்ரீல ஸ்ரீ ஆறுமுகநாவலர்.

சைவ சமயிகளே!

சிவாலயந்தோறும் சைவ சித்தாந்த சபைகள் அமைத்துச் சைவ சமயத்தை ஊர்தோறும் போதிக்க ஏற்பாடு செய்வது நமது கடமையாகும்.





உ
சிவமயம்

பதிப்புரை

"சிவபூசை செய்யுமுன் மற்றொன்றுஞ் செய்யேல்
சிவபூசை செய்தபின்பே செய்"

—சைவ சமய நெறி

பரங்கருணைத் தடங்கடலாகிய சிவபெருமான் பெறுதற்கரிய மனிதப் பிறவியை நமக்குத் தந்தது பசுபதியாகிய அவரை மனத்தினால் நினைத்தற்கும், வாக்கினால் துதித்தற்கும், காயத்தினால் வழிபடுதற்குமாம். "தலையே நீ வணங்காய்" என்று தொடங்கும் திருவங்கமாலைத் திருப்பதிகத்தில் அப்பர் சுவாமிகள் இதனைத் தெளிவுபடுத்தி உள்ளார்கள். விண்ணுலகத்திலுள்ள திருமால், நான்முகன் முதலிய தேவர்களும் இந்நிலவுலகத்திற்கு வந்து சிவபெருமானை அருச்சித்தேத்திப் பெருவரங்கள் பலவற்றைப் பெற்றிருக்கிறார்கள். தேகம் நிலையில்லாதது-அது உள்ள பொழுதே செய்யவேண்டுவதைச் செய்து பெற வேண்டியதைப் பெறுதல் வேண்டும். ஆன்மாக்களில் நல்வளம் பெற்றவர் அனைவரும் சிவபெருமானை மலர் கொண்டு அருச்சித்து வணங்கியே அதனை அடைந்தனர். திருஞான சம்பந்தப் பெருமான்.

"பூத்தேர்ந் தாயன கொண்டுநின் பொன்னடி
யேத்தா தாரில்லை யெண்ணுங்கால்"

என்று அருளிச் செய்தமையால் இவ்வுண்மை புலப்படுகின்றது.

சிவார்ச்சனையாகிய சிவபூசையைக் காட்டிலும் இன்பவீடு அளிக்கும் சாதனம் நமக்குப் பிறிதொன்றில்லை. சிவ புண்ணியங்கள் அனைத்திலும் மேலானது சிவபூசை. வேதத்தை உடன்படுகின்ற சமயவாதிகளுள் சித்தாந்த சைவரல்லாத வேறு சிலரும் சிவபூசை செய்வர். அவர் செய்கின்ற பூசை அவரது சமயக் கொள்கைக்கு விரோதமானதும் பொருளற்றதுமாகும். சிவாகம நெறிமுறையில் சிவதீட்சைபெற்றுச் செய்யும் பூசையே சிவபெருமானுக்கு உவப்பானதும், சித்தியைத் தருவதுமாகும். அங்ஙனம் சிவபூசை செய்யும் பேறு முற்செய் தவமுடையார்க்கன்றி வேறு யாருக்கும் எய்துவதன்று.

"எண்ணில் ஆகமம் இயம்பிய இறைவர்தாம் விரும்பும்
உண்மை யாவது பூசனை"

என்பது முதலாகிய அருளுரைகளை உணர்ந்த பெரியாரும், இராமநாதபுரம் ஜில்லா ஒக்கூரில் வாழும் தனவணிக குலத்து முற்செய் தவமுடையாரும், சைவ சித்தாந்த சரபம் சிவஸ்ரீ ஈசான சிவாசாரிய சுவாமிகளிடம் சமய விசேட தீட்சைகளைப் பெற்று நியமமாகச் சிவபூசை செய்து வருபவரும் ஆகிய சைவத் திருவாளர் நா. சா. சாத்தப்ப செட்டியாரவர்கள் எப்பொழுதும சிவபுண்ணிய ஈட்டத்தில் நாட்டம் கொண்டு வாழ்பவர்கள். அவர்கள் விசுவாவசு ஞூ கார்த்திகை மீ 21உ சோமவார நன்னாளில் சிவஸ்ரீ ஈசான சிவாசாரிய சுவாமி களிடத்தில் நால்வகைத் தீட்சைகளையும் பெற்றுச் சிவபூசை, சித்தாந்த பரிபாலனம் செய்து வருபவர்களும், மெய்யன்பர்கள் பலருக்குச் சிவதீட்சைகள் செய்துவைத்துச் சைவ நெறியை வளர்த்து வருபவர்களுமாகிய சிவஸ்ரீ தத்புருஷ தேசிகரவர்களிடம் நிர்வாண தீட்சை பெற்று உடையவர் பூசை எழுந்தருளச் செய்துகொண்டிருக்கிறார்கள். அதன் ஞாபகார்த்தமாக இந்நூலை நமது திருஆலவாய்ச் சைவ சித்தாந்த சபையின் வெளியீடாக அச்சியற்றித் தர முன் வந்தார்கள்.

இந்நூல் சிவபூசைக்கு இன்றியமையாத தேவார, திருவாசகமாகிய அருட்பாசுரங்களைக் கொண்டு விளங்குவது. வெகு காலத்திற்கு முன் அச்சிடப்பெற்ற இந் நூலின் பிரதிகள் இப்போது கிடைத்தற்கு அரியன ஆயின. இதைச் சைவ உலகத்திற்கு மீண்டும் தர முன்வந்த திரு. சாத்தப்ப செட்டியாரவர்களின் நல்லுதவிக்குச் சைவ உலகம் பெரிதும் கடமைப்பட்டிருக்கிறது. அவர்களுக்கு ஆலவாய் அண்ணல் எல்லா நலங்களையும் அருளுவானாக!

"சிவபூசை செய்யாதவர்களும் இந்நூலை ஓதிவரின் சிவ பூசைப் பலனில் ஒரு கூறேனும் அடைவர்" என இந்நூலுக்குப் பலன் சொல்லியிருப்பதால் சிவநேசச் செல்வர்கள் இதனை நியமமாக ஓதி உய்வார்களாக!

இங்ஙனம்,

தெற்காடி வீதி
மதுரை.

சைவ சித்தாந்த சபையார்

உ
சிவமயம்

முன்னுரை

★

அன்புடையீர் !

"உயிர் தந்தான் தந்தை, உடல் தந்தாள் அன்னை" என்பது ஆன்றோர் திருவாக்கு. உயிர் அறிவு மயமானதாதலின் அறிவு தந்த தந்தையை உயிர் தந்த தந்தையென்றுரைத்தார். "சான்றோனாக்குதல் தந்தைக்குக் கடனே" என்பதும் இக்கருத்துப் பற்றியதே! அடியேன் குழந்தைப் பருவத்தில் தந்தையாரைப் பிரிந்தவன். கல்வி பயின்று நல்லறிவு பெற வேண்டிய பருவத்தில் தந்தையாரின்மையால் ஏற்பட்ட குறை திண்ணைப் பள்ளிப் படிப்போடு அடியேனை நிற்கும்படி செய்துவிட்டது.

பன்னிரண்டாவது வயதில் சமூக முறைப்படி வியாபார நிமித்தம் அடியேனது மூத்த சகோதரர் அயல்நாட்டுக்கு அழைத்துச் சென்று கொடுக்கல் வாங்கல் தொழிலில் பயிற்சி அளித்து உதவினார்கள். மேலைத் தவம் அடியேனுக்கு இருந்தமையால் ஓய்வு நேரங்களில் நீதி நூல்களையும், தேவார திருவாசக மாகிய அருள் நூல்களையும் படிக்கின்ற வாய்ப்பு இடையிடையே கிடைத்தது. அதனால் சிவபரம் பொருளை நினைந்து வழிபாடு செய்யவும், வழிபடும் நெறியை ஆன்றோர்கள் விதித்த விதிப்படி கடைப்பிடிக்கவும் பேரார்வம் உடையவனாயினேன்.

"வினைப்போக மேயொரு தேகங்கண் டாய்வினை
தானொழிந்தால்
தினைப்போ தளவுநில் லாதுகண் டாய்சிவன் பாதநினை
நினைப்போரை மேவு நினையாரை நீங்கி நெறியினின்றால்
உனைப்போல் ஒருவருண் டோமன மேஎனக் குற்றவரே."

என்னும் பட்டினத்தடிகள் திருவாக்கை அடியேன் அடிக்கடி சிந்திப்பதுண்டு. சிவன் பாதம் நினைப்பதற்கு ஆசாரியரே வழிகாட்டி என அறிந்து பாதரக்குடி மடத்துக் குருசாமிகளிடம் ஸ்ரீ பஞ்சாட்சர உபதேசம் பெற்றுச் சில ஆண்டுகள் அநுஷ்டித்து வந்தேன்.

பின்னர் மதுரை பன்னிரு திருமுறை மன்றத்து ஆண்டு விழாத் தலைமைக்கு எழுந்தருளிய பழநி சைவ சித்தாந்த சரபம் சிவஸ்ரீ ஈசான சிவாசாரிய சுவாமிகள் ஒவ்வொருவரும்

சிவதீட்சை பெற வேண்டிய அவசியத்தை வற்புறுத்தி அருளியதைக் கேட்டு அவர்களிடம் சமயதீட்சை பெற்று முறையாகச் சைவாநுஷ்டானமும் சரியைத் தொண்டுகளும் புரிந்து வந்தேன்.

சில ஆண்டுகள் சென்ற பின்னர் அடியேனது முன்னைத் தவம் சிறிது முதிர்ச்சி அடைய அதனால் தேவகோட்டை சிவஸ்ரீ தத்புருஷ தேசிகரவர்களுக்கும் அடியேனுக்குமிருந்த முன்னைத் தொடர்பு நெருக்கமுடையதாக ஆக அவர்கள் உறு துணையாயிருந்து பிலவ ஆண்டு ஐப்பசிச் சுவாதி ஸ்ரீ மெய் கண்ட சிவம் குருபூஜை நன்னாளில் சிவஸ்ரீ ஈசான சிவாசாரிய சுவாமிகளவர்களிடம் அடியேன் விசேட தீக்ஷை பெற்றுச் சிவபூசை எழுந்தருளச் செய்துகொள்ளும் பேற்றுக்கு உரிய வனாக ஆக்கி அருளினார்கள்.

சிவஸ்ரீ சிவாசாரிய சுவாமிகளவர்கள் சிவபரிபூரணம் அடைந்த பிறகு அடியேன் சிவபூசையை முறைப்படி செய்து வருவதற்குப் பூசை முதலியவற்றில் அடியேனுக்குத் தெளி வான விளக்கங்களை அவ்வப்போது சொல்லி உற்சாகத்தை ஊட்டி அடியேனைப் பக்குவப்படுத்தி வந்தவர்கள் சிவஸ்ரீ தத் புருஷ தேசிகரவர்களேயாவார்கள்.

"பிறவிப் பெருங்கடலில் நீந்தி முத்திக்கரையை அடை வதற்குச் சாதனமாகிய சிவஞானத்தை நல்குவது நிர்வாண தீக்ஷை ஒன்றே" என்பது ஞான சாத்திரங்களிற் கண்ட முடிபு. இதனை ஆன்றோர் பலர் உணர்த்த உணர்ந்த அடி யேன் விசுவாவசு ஆண்டு கார்த்திகைத் திங்கள் 21உ சோம வார நன்னாளில் சிவஸ்ரீ தத்புருஷ தேசிகரவர்களிடம் நிர் வாண தீக்ஷை பெற்று உடையவர் பூசை எழுந்தருளச் செய்து கொண்டேன். அதன் ஞாபகார்த்தமாக சிவபூசை செய்யும் அன்பர்களுக்கு உபயோகமாகும் பொருட்டு இந்தச் சிவ பூசைத் திரட்டு என்னும் புத்தகத்தை அச்சிட்டு வெளியிட விரும்பினேன்.

இவ் வெளியீட்டுப் பொறுப்பை ஏற்றுக்கொண்டு நல்ல முறையில் இதனை வெளியிட்ட மதுரை தெற்காடி வீதி சைவ சித்தாந்த சபையாருக்கு அடியேனது நன்றி. அன்பர்கள் இதனை வாங்கிப் படித்துச் சிவபெருமான் திருவருள் பெற்று உய்வார்களாக!

ஒக்கூர்
பராபவ-வைகாசி-9.

அன்புள்ள
நா. சாத்தப்பன்.

உ
சிவமயம்
பாலருவாயர் துணை.

சிறப்புரை

தேவகோட்டை
சிவஸ்ரீ தத்புருஷ தேசிகரவர்கள்.

இறைவனாற் படைக்கப்பட்ட எண்பத்து நான்கு நூறாயிரம் யோனி பேதங்களுள் கரந்தரும் பயன் இதுவென உணர்ந்து கம்பம் மேவிய உம்பர் நாயகரைப் பூசிக்கும் வாய்ப்பு மனிதப் பிறவி ஒன்றுக்கே வாய்த்துள்ளது.

"பெறுதற் கரிய பிறவியைப் பெற்றும்
பெறுதற் கரிய பிரானடி பேணார்
பெறுதற் கரிய பிராணிகள் எல்லாம்
பெறுதற் கரியதோர் பேறிழந் தாரே"

என்றும்

"புண்ணியஞ் செய்வோர்க்குப் பூவுண்டு நீருண்டு
அண்ணல் அதுகண் டருள்புரி யாநிற்கும்"

என்றும் திருமந்திரம் கூறுகின்றது பலகோடிப் பிறப்புக்களில் செய்த நல்வினையின் பயனாகச் சற்குரு தரிசனமும், சிவ பூசைப் பேறும் சித்திக்கும். எல்லோராலும் பூசிக்கப்பெறு பவனும், யாரொருவரையும் பூசிக்காதவனுமாகிய சிவபெரு மானை அப்பெருமானின் வாய்மொழியாகிய சிவாகம நெறிப்படி பூசிப்பது இம்மை, மறுமை நலங்கள் எல்லாவற்றையும் தருவ தாகும். இவ்வுண்மையை உணருவதற்குரிய பக்குவம் மனித உடம்பெடுத்தவர்களில் ஒரு சிலருக்கே இருக்கின்றது.

சிவபூசை முறை சிவாகமங்களில் சிவபெருமானால் விதிக்கப் பெற்றுள்ளது. அதனை உணர்ந்த நமது அருளாசிரியன்மார்கள் அவர்களது தேவாராதி அருள் நூல்களில் அச் சிவாகமக் கருத்துக்களை ஆங்காங்கே அருளிப் போந்தனர். சிவபூசை செய்வோர் பூசைக்குரிய கிரியைகளைச் செய்யும்போது

அவற்றிற்குரிய மந்திரங்களை ஓதிப் பாவனை சித்தித்தற் பொருட்டுத் தமிழில் அவ்வப் பொருள்களை உணர்த்துகின்ற திருமுறைப் பாடல்களை ஓதும் முறையை மேற்கொள்ளுவது சாலச் சிறந்தது. அங்ஙனம் ஓதுவதற்கு உதவியாக இத் தொகுப்பு நூல் அமைந்துள்ளது.

இந்நூலை வெளியிட்டுச் சிவம் பெருக்க முன்வந்த திருவாலவாய்ச் சைவ சித்தாந்த சபையினருக்கும் இதனை வெளியிடுவதற்குப் பொருளுதவி புரிந்த நமது அன்புருவாகிய அரும்பெறற் செல்வர் ஒக்கூர், நா. சா. சாத்தப்ப செட்டியாரவர்களுக்கும் ஸ்ரீ மீனுட்சி அம்மையார் சமேத சொக்கேசப் பெருமானின் பேரருள் மென்மேலும் நிறைவதாக!

நலம் பெருகுக!

உ
கணபதி துணை



திருச்சிற்றம்பலம்

சிவபூசைத் திரட்டு

ஆனைமுக னறுமுக னம்பிகைபொன் னம்பலவன்
ஞானகுரு வாணியையுண் ணடு.

ஆலமே யமுதமாக வுண்டுவானவர்க் களித்துக்
காலனை மார்க்கண்டர்க்காக் காய்ந்தனை யடியேற்கின்று
ஞாலநின் புகழேயாக வேண்டுநான் மறைகளேத்துஞ்
சீலமே யாலவாயிற் சிவபெருமானே யென்றார்.

[பெரியபுராணம்]

ஆரம்பம்

திருஞானசம்பந்தசுவாமிகள், திருப்பிரமபுரம்பண்நட்டபாடை

தோடுடையசெவியன்விடையேறியோர் தூவெண்மதிசூடிக்
காடுடையசுடலைப்பொடிபூசியென் னுள்ளங்கவர் கள்வன்
ஏடுடையமலரான்முனைநாட்பணிந்தேத்தவருள்செய்த
பீடுடையபிரமாபுரமேவியபெம்மானிவனன்றே. (1)

திருநாவுக்கரசுசுவாமிகள், திருவதிகைவீரட்டானம்
பண் — கொல்லி

கூற்றாயினவாறுவிலக்ககிலீர்கொடுமைபலசெய்தனநானறி
ஏற்றாயடிக்கேயிரவும்பகலும்பிரியாதுவணங்குவனெப் [யேன்
[பொழுதுந்
தோற்றாதென்வயிற்றினகம்படியேகுடரோடுதுடக்கிமுடக்கி
[யிட
ஆற்றேனடியேனதிகைக்கெடிலவீரட்டானத் துறையம்மானே

சுந்தரமூர்த்திசுவாமிகள், திருவெண்ணெய்நல்லூர்
பண் — இந்தளம்

பித்தாபிறைசூடிபெருமானேயருளாளா
எத்தான்மறவாதேநினைக்கின்றேன்மனத்துன்னை [றையு
வைத்தாய்பெண்ணைத்தென்பால்வெண்ணெய்நல்லூரருட்டு
அத்தாவுனக்காளாயினியல்லேனெனலாமே (3)

திருநா. திருவாலவாய்த் திருத்தாண்டகம்

முளைத்தானை யெல்லார்க்கு முன்னேதோன்றி
முதிருஞ் சடைமுடிமேன் முகிழ்வெண்டிங்கள்
வளைத்தானை வல்லசுரர் புரங்கண்மூன்றும்
வரைசிலையா வாசுகி மாநாணாக்கோத்துத்
துளைத்தானைச் சுடு சரத்தாற் றுவளநீறாத்
தூமுத்தவெண் முறுவலுமை யோடாடித்
திளைத்தானைத்தென் கூடற்றிரு வாலவாய்ச்
சிவனடியே சிந்திக்கப் பெற்றேனானே. (4)

பூதசுத்தி

திருநா. திருக்கற்குடி, திருத்தாண்டகம்

மண்ணா தனிலைந்தை மாநீரி னுன்கை
வயங்கெரியின் மூன்றை மாருதத் திரண்டை
விண்ணா தனி லொன்றை விரிகதிரைத்
தண்மதியைத் தாரகை கடம்மின் மிக்க
எண்ணா தனி லெழுத்தை யேழிசை யைக்காம
னெழிலழிய வெரியுமிழ்ந் தவிமையா நெற்றிக்
கண்ணவனைக் கற்குடியில் விழுமியானைக்
கற்பகத்தைக் கண்ணாரக் கண்டே னானே. (5)

திருஞான, திருமறைக்காடு திருவிராகம், பண் - நட்டபாடை

இருநிலனது புனலிடை மடிதர வெரிபுக வெரியதுமிகு
பெருவளியி னிலவிதர வளிகெடவி யனிடைமுழு வதுகெட [ர்
இருவர்களுடல்பொறையொடுதிரியெழிலுருவுடையவ னினமல
மருவியவறுபத மிசைமுரன் மறைவன மமர்தரு பரமனே. (6)

அந்தரியாகம்

திருநா. தனித்திரு நேரிசை

காயமே கோயிலாகக் கடிமன மடிமையாக
வாய்மையே தூய்மையாக மனமணியி லிங்கமாக
நேயமே நெய்யும்பாலா நிறையநீ ரமையவாட்டிப்
பூசனை யீசனுர்க்குப் போற்றவிக் காட்டினோமே. (7)

மேற்படி சுவாமிகள் தனித்திருக் குறுந்தொகை

தெள்ளத் தேறித் தெளிந்து தித்திப்பதோர்
உள்ளத் தேற லமுத வொளிவெளி
கள்ளத்தேன் கடியேன் கவலைக் கடல்
வெள்ளத் தேனுக் கெவ்வாறு விளைந்ததே. (8)

மேற்படி சுவாமிகள், தனித்திரு நேரிசை

உடம்பெனு மனையகத்து வுள்ளமே தகளியாக
மடம்படு முணர்நெய்யட்டி யுயிரெனுந் திரிமயக்கி
இடம்படு ஞானத்தீயா லெரிகொள விருந்து நோக்கில்
கடம்பமர் காளைதாதை கழலடி காணலாமே. (9)

சிவோகம்பாவனை

சுந்தர, திருவொற்றியூர் பண் - தக்கேசி

வழித்தலைப் படுவான் முயல்கின்றே
னுன்னைப்போ லென்னைப் பாவிக்க மாட்டேன்
சுழித்தலைப் பட்ட நீரதுபோலச்
சுழல்கின்றேன் சுழல்கின்ற தென்னுள்ளம்
கழித்தலைப் பட்ட நாயதுபோல
வொருவன் கோல்பற்றிக் கறகற விழுக்கை
ஒழித்துநீ யருளாயின செய்யா
யொற்றியூ ரெனுமூ ருறைவானே. (10)

திருநா. திருவாப்பாடி, திருநேரிசை

உள்ளுமாய்ப் புறமுமாகி யுருவுமா யருவுமாகி
வெள்ளமாய்க் கரையுமாகி விரிகதிர் ஞாயிறாகிக்
கள்ளமாய்க் கள்ளத்துள்ளார் கருத்துமா யருத்தமாகி
அள்ளுவார்க் கள்ளல்செய் திட்டிருந்தவாப் பாடியாரே.

ஷை சுவாமிகள், கோயிற்றிரு நேரிசை

பத்தனாய்ப் பாடமாட்டேன் பரமனே பரமயோகி
எத்தினாற் பத்திசெய்கே னென்னைநீ யிகழவேண்டா
முத்தனே முதல்வா தில்லையம்பலத் தாடுகின்ற
அத்தாவுன் னாடல்காண் பானடியனேன்வந்தவாறே (12)

பெட்டகக்கோயில் திறக்க

ஷை சுவாமிகள் திருமறைக்காடு. திருக்குறுந்தொகை

பண்ணினேர்மொழியாளுமைபங்கரோ
மண்ணினார்வலஞ்செய்ம்மறைக்காடரோ
கண்ணினாலுமைக்காணக்கதவினைத்
திண்ணமாகத்திறந்தருள்செய்ம்மினே (13)

பெட்டகக்கோயிலினின்றும் சுவாமியை எழுந்தருளப்பண்ண.

ஸ்ரீ சுவாமிகள், திருப்புள்ளிருக்குவேளூர். திருத்தாண்டகம்.

ஆண்டானையடியேனையாளாக் கொண்டு
வடியோடுமுடியயன்மாலறியாவண்ணம்
நீண்டானைநெடுங்களமாநகரான்றன்னை
நேமிவான்படையானீளூரவோனுகம்
கீண்டானைக்கேதாரமேவினானைக்
கேடிலியைக்கிளர்பொறிவாளரவோடென்பு
பூண்டானைப்புள்ளிருக்குவேளூரானைப்
போற்றுதேயாற்றநாள்போக்கினேனே. (14)

இருளாய வுள்ளத்தி னிருளை நீக்கி
யிடர்பாவங் கெடுத்தேழை யேனை யுய்யத்
தெருளாத சிந்தைதனைத் தெருட்டித் தன்போற்
சிவலோக நெறியறியச் சிந்தை தந்த
அருளானை யாதிமா தவத்து ளானை
யாறங்க நால்வேதத் தப்பா நின்ற
பொருளானைப் புள்ளிருக்கு வேளூ ரானைப்
போற்றுதே யாற்றநாள் போக்கி னேனே (15)

ஸ்நான வேதிகையில் எழுந்தருளச்செய்ய.

ஸ்ரீ சுவாமிகள். திருக்கடுவாய்க்கரைப்புத்தூர் குறுந்தொகை

பந்தபாசமறுத்தெனையாட்கொண்ட
மைந்தனை மணவாளனை மாமலர்க்
கந்தநீர்க்கடுவாய்க்கரைத்தென்புத்தூர்
எந்தையீசனைக்கண்டினிதாயிற்றே. (16)

அட்டபுஷ்பம்.

ஸ்ரீ சுவாமிகள். திருமறைக்காடு, குறுந்தொகை.

அட்டமாமலர்சூடியடும்பொடு
வட்டப்புன்சடைமாமறைக்காடரோ
நட்டமாடியுநான்மறைபாடியும்
இட்டமாகவிருக்குமிடமிதே. (17)

தூபதீபம்.

திருஞான. திருச்சண்பை. திருவிராகம். பண்—சாதாரி.

எந்தமதுசிந்தைபிரியாதபெருமானெனவிறைஞ்சியிமையோர்
வந்துதுதிசெய்யவளர்தூபமொடுதீபமலிவாய்மையதனல்
அந்தியமர்சந்திபலவர்ச்சனைகள்செய்யவமர்கின்றவழகன்
சந்தமலிகுந்தளநன்மாதினொடுமேவுபதிசண்பைநகரே. (18)

எண்ணெய்க்காப்பு

திருஞான. கோயில் பண் — காந்தாரபஞ்சமம்.

ஆடினாய்நறுநெய்யொடுபானயிரந்தணர்பிரியாதசிற்றம்பலம்
நாடினாயிடமாநறுங்கொன்றைநயந்தவனே [வெண்டிங்கள்
பாடினாய்மறையோடுபல்கீதமும்பல்சடைப்பனிகால்கதிர்
சூடினாயருளாய்சுருங்கவெம்தொல்வினையே (19)

பஞ்சகௌவியம்.

திருநா. பாவநாசத் திருக்குறுந்தொகை

பாவமும்பழிபற்றற வேண்டுவீர்
ஆவிலஞ்சுகந்தாடுமவன்கழல்
மேவராய்மிகவும்மகிழ்ந்துள்குமின்
காவலாளன்கலந்தருள்செய்யுமே. (20)

பாலமுதம்.

திருஞான. திருச்செங்காட்டங்குடி. பண்—பழந்தக்கராகம்.

பாலினுனறுநெய்யாற் பழத்தினாற் பயின்றாட்டி
நாலினுன் மணமாலை கொணர்ந்தடியார் புரிந்தேத்தச்
சேலினார் வயல்புடைசூழ் செங்காட்டங் குடியதனுள்
காலினாற் கூற்றுதைத்தான் கணபதீச் சரத்தானே. (21)

நெய்

திருநா. திருப்புகலூர், திருந்தாண்டகம்

நெய்யாடி நின்மலனே நீலகண்டா
நிறைவுடையாய் மறைவல்லாய் நீதியானே
மையாடுகண் மடவாள் பாகத்தானே
மான்றோ லுடையாய் மகிழ்ந்து நின்றாய்.......

கொய்யாடு கூவிளங் கொன்றைமாலை
கொண்டடியே னிட்டுக் கூறிநின்று
பொய்யாத சேவடிக்கே போதுகின்றேன்
பூம்புகலூர் மேவிய புண்ணியனே. (22)

பால்

அப்பர் சுவாமிகள், திருவெண்காடு திருக்குறுந்தொகை

பாலை யாடுவர் பன்மறை யோதுவர்
சேலை யாடிய கண்ணுமை பங்கனார்
வேலை யார்விட முண்டவெண் காடர்க்கு
மாலை யாவது மாண்டவ ரங்கமே. (23)

தேன்

சுந்தர. திருவாவடுதுறை பண் - தக்கேசி

வானநாடனேவழித்துணைமருந்தேமாசிலாமணியேமறைப்
[பொருளே
ஏனமாவெயிருமையுமென்புமீடுதாங்கியமார்புடையானே
தேனெய்பாறயிராட்டுகந்தானேதேவனே திருவாவடுதுறையுள்
ஆனையேயெனையஞ்சலென்றருளாயாரெனக்குறவமரர்களேறே.

திருநா. திருநீலக்குடி, திருக்குறுந் தொகை

செய்ய மேனியன் றேனொடு பாறயிர்
நெய்ய தாடிய நீலக் குடியரன்
மையலாய் மறவா மனத்தார்க் கெலாம்
கையிலா மலகக் கனியொக் குமே. (25)

கருப்பஞ்சாறு

அப்பர் சுவாமிகள், திருவீழிமிழலை திருத்தாண்டகம்

ஆலைப்படு கரும்பின் சாறு போல
வண்ணிக்கு மஞ்செழுத்தி னுமைத்தான்காண்
ஓலமுடை யடியார் சிந்தையான் காண்
திரிபுரமூன் றெரிபடுத்த சிலையினன் காண்

பாலினொடு தயிர்நறு நெய்யாடி னான்காண்
பண்டரங்க வேடன்காண் பலிதேர்வான்காண்
வேலைவிட முண்ட மிடற்றினான்காண்
விண்ணிழி தண் வீழிமிழலை யானே. (26)

பலகனிச்சாறு

ஸ்ரீ சுவாமிகள், திருவிடைமருதூர். திருக்குறுந்தொகை.

கனியினுங் கட்டிபட்ட கரும்பினும்
பனிமலர்க் குழற்பாவை நல்லாரினும்
தனிமுடி கவித்தாளு மரசினும்
இனியன் றன்னடைந் தார்க்கிடை மருதனே. (27)

இளநீர்

ஸ்ரீ சுவாமிகள். திருவீழிமிழலை. திருத்தாண்டகம்

நெய்யினொடு பாலிளநீ ராடினான்கா
ணித்தமண வாளனென் கின்றான்காண்
கையின்மழு வாளொடு மானேந்தி னான்காண்
காலனுயிர் காலாற் கழிவித்தான்காண்
செய்யதிரு மேனிவெண் ணீற்றினான் காண்
செஞ்சடைமேல் வெண்மதியஞ் சேர்த்தினான்காண்
வெய்யகனல் விளையாட் டாடினான்காண்
விண்ணிழி தண்வீழி மிழலையானே. (28)

சுத்த சலம்

திருஞான. திருவிடைமருதூர். பண் - தக்கராகம்

தடங்கொண்ட தொர்தாமரைப் பொன்முடி தன்மேல்
குடங்கொண் டடியார் குளிர்நீர் சுமந்தாட்டப்
படங்கொண்ட தொர்பாம் பரையார்த்த பரமன்
இடங்கொண் டிருந்தான் றனிடை மருதீதோ. (29)

ஸ்நானம் பண்ண

திருநா. திருவாலங்காடு திருத்தாண்டகம்

ஒன்றா யுலகனைத்து மானார் தாமே
யூழிதோ றூழி யுயர்ந்தார் தாமே
நின்றாகியெங்கு நிமிர்ந்தார் தாமே
நீர்வளி தீயா காச மானார் தாமே

கொன்றூடுங் கூற்றை யுதைத்தார் தாமே
கோலப் பழனை யுடையார் தாமே
சென்றூடு தீர்த்தங்க ளானார் தாமே
திருவாலங் காடுறையுஞ் செல்வர் தாமே. (30)

திருமந்திரம்

அறிவா ரமரர்க ளாதிப் பிரானைச்
செறிவா னுறைபதஞ் சென்று வலங்கொண்
மறிவார் வளைக்கை வருபுனற் கங்கைப்
பொறியார் புனன் மூழ்கப் புண்ணியராமே. (31)

சந்தனக் குழம்பு

திருநா. தனித்திரு நேரிசை

தொண்டனேன் பட்டதென்னே தூயகாவிரியி னன்னீர்
கொண்டிருக் கோதியாட்டுக் குங்குமக் குழம்பு சாத்தி
இண்டை கொண்டேற நோக்கியீசனை யெம்பிரானைக்
கண்டனைக் கண்டிராதே காலத்தைக் கழித்தவாறே (32)

திருஞான திருக்காளப்பேர். பண் - கொல்லி

வாவிவாய்த் தங்கிய நுண்சிறை வண்டினம்
காவிவாய்ப் பண்செயுங் கானப்பே ரண்ணலை
நாவிவாய்ச் சாந்துளும் பூவுளு ஞானநீர்
தூவிவாய்ப் பெய்துநின் றூட்டுவார் தொண்டரே. (33)

தூபம்

பி. சுவாமிகள், திருச்செங்காட்டங்குடி பண்-பழந்தக்கராகம்

தொங்கலுங் கமழ்சாந்து மகிற்புகையுந் தொண்டர் கொண்
டங்கையாற் றொழுதேத்த வருச்சுனர்க்கன் றருள்செய்தான்
செங்கயல்பாய் வயலுடுத்த செங்காட்டங் குடியதனுள்
கங்கை சேர்வார் சடையான் கணிபதீச் சரத்தானே. (34)

சுத்தோதகம்

திருநா. திருப்பாதிரிப்புலியூர், திருவிருத்தம்

வைத்தபொருணமக்காமென்று சொல்லி மனத்தடைத்துச்
சித்தமொருக்கிச் சிவாயநமவென் றிருக்கி னல்லால்
மொய்த்த கதிர்மதி போல்வா ரவர்பாதிரிப் புலியூர்
அத்தனருள் பெறலாமோ வறிவிலாப் பேதை நெஞ்சே. (35)

பீடத்திலெழுந்தருளப் பண்ண

திருஞான. திருப்புள்ளிருக்குவேளூர் பண் - சீகாமரம்

கள்ளார்ந்த பூங்கொன்றை மதமத்தங் கதிர்மதியம்
உள்ளார்ந்த சடைமுடியெம் பெருமானா னுறையுமிடந்
தள்ளாய சம்பாதி சடாயென்பார் தாமிருவர்
புள்ளானார்க் கரையனிடம் புள்ளிருக்கு வேளூரே. (36)

ஆவாகனம்

திருநா சித்தத்தொகைத் திருக்குறுந் தொகை

அண்டமா ரிருளூடு கடந் தும்பர்
உண்டு போலுமோ ரொண்சுட ரச்சுடர்
கண்டிங்கா ரறிவா ரறிவா ரெலாம்
வெண்டிங்கட் கண்ணிவேதிய னென்பரே. (37)

திருநா. சுவாமிகள் திருவின்னம்பர் திருக்குறுந்தொகை.

என்னி லாருமெனக் கினியா ரில்லை
என்னிலும் மினியா னொருவ னுளன்
என்னுளே யுயிர்ப்பாய்ப் புறம்போந் துபுக்
கென்னுளே நிற்கு மின்னம்ப ரீசனே. (38)

தியானம்

அஞ்சு திருமுகமே நிறங்களைந்தே
மைமூன்று திருக்கண்ணே யத்தம்பத்தே
வஞ்சமழுச் சூலம்வாள பயம்வச்ரம்
வலப்பாலே யமர்ந்தது மற்றிடப்பால்
துஞ்சனலு மங்குசமு மணியும் பாம்புந்
தோற்கயிறு முடனுண்டே தோகையுண்டே
பிஞ்சுமதி முடிமேற் கங்கையுண்டே
யிப்படியெம் பிரானரைக் கண்டவாறே. (39)

சிவதருமோத்தரம் பரிகாரவியல்.

உச்சிமுகமீசான மொளிதெளிய பளிங்கே
யுத்தரபூருவ திசையை நோக்கி யுறுமுகந்தே
நிச்சயித்த முகத்தின்கீழ்ப் பூர்வதிசை நோக்கி
நிகழுமுகந் தற்புருடங் கோங்கலர் போனிறமே

யச்சுறுத்தும கோரமுக மறக்கரிது கராள
மவிழ்தாடி வலத் தோளிற்றென்னேக்கிய மருஞ்
செச்சை நிறந்தெரிவை முகமிடத் தோண்மேல்வாமஞ்
சிறுபுறத்தின் முகஞ்சத்தி யோசாதந் திகழ்வால். (40)

அருக்கியம்.

திருஞான திருநனிபள்ளி பண்-பியந்தைக்காந்தாரம்.

தோடொருகாதனுகியொருகாதிலங்குசுரிசங்குநின்றுபுரளக்
காடிடமாகநின்றுகனலாடுமெந்தையிடமாய காதனகர்தான்
வீடுடனெய்துவார்கள்விதியென்றுசென்றுவெறிநீர்
[தெளிப்பவிரலால்
நாடுடனுடுசெம்மையொலிவெள்ளமாருநனிபள்ளிபோலு
[நமர்காள். (41)

கோவணம் பாவனைசாத்த.

சுவாமிகள் திருக்கொள்ளிக்காடு பண்-காந்தாரபஞ்சமம்.

பாவணமேவுசொன்மாலையிற்பல
நாவணங்கொள்கையினவின்றசெய்கையர்
ஆவணங்கொண்டெமையாள்வராயினும்
கோவணங்கொள்கையர்கொள்ளிக்காடரே (42)

கீள்பாவனைசாத்த.

திருநா. திருப்பராய்த்துறை. குறுந்தொகை.

பட்டநெற்றியர்பான்மதிக்கீற்றினர்
நட்டமாடுவர்நள்ளிருளேமமும்
சிட்டனூர்தென்பராய்த் துறைச்செல்வனூர்
இட்டமாயிருப்பாரையறிவரே. (43)

பரிவட்டம்.

சுவாமிகள் திருப்பருப்பதம். திருநேரிசை.

கட்டிட்டதலைகையேந்திக்கனலெரியாடிச்சிறிச்
சுட்டிட்டநீறுபூசிச்சுடுபிணக்காடராகி
விட்டிட்டவேட்கையார்க்குவேறிருந்தருள்கள்செய்து
பட்டிட்டவுடையராகிப்பருப்பதநோக்கினரே. (44)

சந்தனஞ்சாத்த.

ஷை சுவாமிகள் - திருக்கீழ்வேளூர். திருத்தாண்டகம்.

ஆளானவடியவர்கட்கன்பன்றன்னை
யானஞ்சுமாடி யைநானபயம்புக்க
தாளானைத்தன்றெப்பாரில்லா தானைச்
சந்தனமுங்குங்குமமுஞ்சாந்துந்தோய்ந்த
தோளானைத்தோளாதமுத்தொப்பானைத்
தூவெளுத்தகோவணத்தையரையிலார்த்த
கேளானைக்கீழ்வேளூராளுங்கோவைக்
கேடிலியைநாடுமவர்கேடிலாரே. (45)

பூஷணம்.

திருஞான. திருக்கைச்சினம். பண் - கொமரம்.

மங்கையோர்கூறுடையான்மன்னுமறைபயின்றான்
அங்கையோர்வெண்டலையானடரவம்பூண்டுகந்தான்
திங்களொடுபாம்பணிந்தசீரார்திருமுடிமேற்
கங்கையினான்மேவியுறைகோயில்கைச்சினமே. (46)

பூணூல்.

ஷை சுவாமிகள். திருநணா. பண் - காந்தாரம்,

முத்தேர்நகையாளிடமாகத்தம்மார்பில்வெண்ணூல்பூண்டு
தொத்தேர்மலர்சடையில்வைத்தாரிடம்போலுஞ்சோலைசூழ்ந்த
அத்தேனளியுண் களியா லிசைமுரல வாலத்தும்பி
தெத்தேயெனமுரலக் கேட்டார்வினை கெடுக்குந்
திருநணாவே. (47)

புஷ்பாஞ்சலி

திருநா. திருவையாறு திருவிருத்தம்

நின்போலமரர்க ணின்முடிசாய்த்து நிமிர்ந்துகுத்த
பைம்போ துழக்கிப்பவளந் தழைப்பன பாங்கறியா
என்போலிகள பறித்திட்ட விலையுமுகையு மெல்லாம்
அம்போதெனக் கொள்ளு மையனையாற னடித்தலமே. (48)

இண்டை சாத்த

ஷை சுவாமிகள் திருக்கச்சி மேற்றளி. பண் காந்தாரம்

அண்டமா யாதியா யருமறை யோடைம்பூதப்
பிண்டமா யுலகுக்கோர் பெய்பொருளாம் பிஞ்ஞகனைத்
தொண்டர்தா மலர்தூவிச் சொன்மாலை புனைகின்ற
இண்டைசேர் சடையானை யென்மனத்தே வைத்தேனே. (49)

திருப்பள்ளித்தாமம் பத்திரஞ் சாத்த

ஷ சுவாமிகள் திருப்பாய்த்துறை குறுந்தொகை

போதுதா தொடுகொண்டு புனைந்துடன்
தாதவிழ் சடைச் சங்கரன் பாதத்துள்
வாதை தீர்க்கவென் றேத்திப் பராய்த்துறைச்
சோதியானைத் தொழுதெழுந் துய்ம்மினே. (50)

திருஞான திருக்கச்சியேகம்பம் பண் - இந்தளம்

நொச்சியே வன்னி கொன்றை மதிகூவிளம்
உச்சியே புனைதல்வேடம் விடையூர்தியான்
கச்சியே கம்பம் மேயகறைக் கண்டனை
நச்சியே தொழுமினும் மேல்வினை கையுமே. (51)

போகாங்கமூர்த்தி பூசைக்குத் தியானம்

சிவதருமோத்தரம் பரிகாரவியல்

திருவுருவந் தெளிபளிங்கு திரிநயனம் பிறையுஞ்
செறிசடையர் வலக்கரத்திற் றிரிசூலம் வரதம்
கருதுகமற் றையகரத்திற் செபமாலை யபயங்
காருணிகர்க் கீசானர்க் கவர்தமக்குக் கனிட்டர்
திருவுருவங் கோங்கினலர் திரிநயனங் கரமுன்
செப்பியதே திருநாமந் தற்புருட தேவர்
வரியரவு மிளம்பிறையுஞ் சடைமுடியின் வைத்தார்
மலரடியை மறவாதார் வல்வினையை மாய்ப்பார். (52)

கரியவுரு வெரியசடை கபாலநிரைமாலை
கராளமுகங் கவிழ்தாடி கண்மூன்றுவட்டங்
கரதலங்க ளொருநான்கும் கட்டுரைத்தபடியே
காட்டினமுன் னிருநான்கு கரமுமுள ரென்றே
வெருவியிட மருவலரை வெருட்டியவுக் கிரத்து
விக்கிரகா கோரமென விளம்புபெய ருடைய
ரிருபதமு மொருபொழுது மறவாதேயேத்தி
யெண்ணுமவ ரிடர்வினையை யிடிப்பார்க ளென்றும் (53)

தேமொழியா ளுமையென்னத் திருமுகமுந் தோடுந்
திலதநுதற் சிறப்புமிருள ளகவிதச் செறிவும்
வாமமெனுந் தேவர்க்கு வாய்த்தனவே செம்மை
வடிவுமவர் கரதலங் கண்ணுநிதனில் வகுப்பே

சேமவுருத் திகழ்சங்கஞ் சடாமுடியிற் பிறையுந்
திரிநயனங் கரதலங்கள் செப்பிய முற்படியே
நாமமது சத்தியோ சாதமென நவின்ற
நாதற்கு நயந்தவரை நினைக்கவினை நாசம். (54)

திருவுருவ மிதயர்க்குத் தவளமெனத்தெளிக
சேடித்த வுருப்பனைத் துஞ் செப்பியமுற் படியே
திருவுருவங்கனகமெனச்சிரத்தினுக்குத்தெளிக
சேடித்தவுருப்பனைத்துஞ்செப்பியமுற்படியே
திருவுருவஞ்சிந்தூரமெனத்தெளிகசிகைக்குச்
சேடித்தவுருப்பனைத்துஞ்செப்பியமுற்படியே
திருவுருவம்வண்டினிறங்கராளமுகங்கவசஞ்
சேடித்தவுருப்பனைத்துஞ்செப்பியமுற்படியே (55)

ஒவ்வொன்றேதிருமுகமுநேத்திரங்கட்குணரி
னுடலொளியுமிரவிமதியுதாசனனையொக்கு
மிவ்விரண்டேகரதலமும்வரமபயமவையு
மிவ்விரண்டேவிழியுமெனவெண்ணிடுகவெழிலார்
செவ்வரத்தந்திருவுருவங்கரதலமீரைந்துந்
திருநயனமொருமூன்றுஞ்சினந்தடித்தகுரலு
மிவ்வகையெல்லாமுடையரத்தினரென்றியம்பு
மிவரடியையிதயத்தினிருத்தினிடரிலையே (56)

நிவேதனஞ்செய்ய.

சுந்தர. திருக்கச்சியேகம்பம், பண் – தக்கேசி.

ஆலந்தானுகந்தமுதுசெய்தானையாதியையமரர்தொழுதேத்
[தும்
சீலந்தான்பெரிதும்முடையானைச்சிந்திப்பாரவர்சிந்தையுளானை
ஏலவார்குழலாளுமைநங்கையென்றுமேத்திவழிபடப்பெற்ற
காலகாலனைக்கம்பனெம்மானைக்காணக்கண்ணடியேன்பெற்ற
[வாறே (57)

அடைக்காம்பு.

திருநா. திருப்புறம்பயம். திருத்தாண்டகம்.

ஆகாதநஞ்சுண்டவந்திவண்ண
ரைந்தலையமாசுணங்கொண்டம்பொற்றோண்மேல்
ஏகாசமாவிட்டொன்றேந்திவந்
திடுதிருவேபலியென்றார்க்கில்லேபுக்கேன்
பாகேதுங்கொள்ளாபலியுங்கொள்ளார்
பாவியேன்கண்ணுள்ளேபற்றிநோக்கிப்
போகாதவேடத்தர்பூதஞ்சூழப்
புறம்பயநம்மூரென்றுபோயினாரே. (58)

தூபம்.

திருஞான' திருக்கழிப்பாலை. பண்–கௌசிகம்.

வெந்தகுங்குலியப்புகைவிம்மவே
கந்தநின்றுலவுங்கழிப்பாலையார்
அந்தமும்மளவும்மறியாததோர்
சந்தமாலவர்மேவியசாந்தமே. (59)

தீபம்.

திருநா. திருவையாறு. திருத்தாண்டகம்.

எல்லாவுலகமுமானாய்நீயே
யேகம்பமேவியிருந்தாய்நீயே
நல்லாரைநன்மையறிவாய்நீயே
ஞானச்சுடர்விளக்காய்நின்றாய்நீயே
பொல்லாவினைகளறுப்பாய்நீயே
புகழ்ச்சேவடியென்மேல்வைத்தாய்நீயே
செல்வாயசெல்வந்தருவாய்நீயே
திருவையாறகலாத செம்பொற்சோதி. (60)

ஷைசுவாமிகள், திருமறைக்காடு. திருத்தாண்டகம்

தூண்டுசுடரனையசோதிகண்டாய்
தொல்லமரர்சூளாமணிதான்கண்டாய்
காண்டற்கரியகடவுள்கண்டாய்
கருதுவார்க்காற்றவெளியான்கண்டாய்
வேண்டுவார் வேண்டுவதே யீவான் கண்டாய்
மெய்ந்நெறிகண்டாய்விரதமெல்லாம்
மாண்டமனத்தார் மனத்தான் கண்டாய்
மறைக் காட்டுறையு மணாளன்றானே. (61)

நீறுசாத்த.

ஷைசுவாமிகள். திருவாரூர் பண்–காந்தாரம்

நீறுமெய்ப்பூசவல்லானுநினைப்பவர்நெஞ்சத்துள்ளானும்
ஏறுகந்தேறவல்லானுமெரிபுரைமேனியினானும்
நாறுகரந்தையினானுநான்மறைக்கண்டத்தினானும்
ஆறுசடைக்கரந்தானுமாரூரமர்ந்தவம்மானே. (62)

திருஞா. திருவாலவாய்த் திருநீற்றுப்பதிகம். பண்—காந்தாரம்.

மந்திரமாவதுநீறுவானவர்மேலதுநீறு
சுந்தரமாவதுநீறுதுதிக்கப்படுவதுநீறு
தந்திரமாவதுநீறுசமயத்திலுள்ளதுநீறு
செந்துவர்வாயுமைபங்கன்திருவாலவாயான்
திருநீறே. (63)

திருநா. தனித்திருநேரிசை.

சந்திரற்சடையில்வைத்தசங்கரன்சாமவேதி
அந்தரத்தமரர்பெம்மானனல்வெள்ளூர்தியான்றன்
மந்திரநமச்சிவாயவாகநீறணியப்பெற்றால்
வெந்தறும்வினையுநோயும்வெவ்வழல்விறகிட்டன்றே. (64)

கண்ணாடி.

ஷ சுவாமிகள். திருவாரூர், திருவிருத்தம்.

பூம்படிமக்கலம்பொற்படிமக்கலமென்றிவற்றால்
ஆம்படிமக்கலமாகிலுமாரூரினிதமர்ந்தார்
தாம்படிமக்கலம்வேண்டுவரேற்றமிழ்மாலைகளால்
நாம்படிமக்கலஞ்செய்துதொழுதுய்மடநெஞ்சமே. (65)

செபம்பண்ணி உதகம்பண்ண.

நமச்சிவாயப்பதிகம்.

சுந்தர. திருப்பாண்டிக்கொடுமுடி. பண் பழம்பஞ்சுரம்.

இட்டனும்மடியேத்துவாரிகழ்ந்திட்டநாண்மறந்திட்டநாள்
கெட்டநாளிவையென்றலாற்கருதேன்கிளர்புனற்காவிரி
வட்டவாசிகைகொண்டடிதொழுதேத்துபாண்டிக்கொடுமுடி
நட்டவாவுனைநான்மறக்கினுஞ்சொல்லுநாநமச்சிவாயவே. (66)

குருவர்ச்சனை.

ஷ சுவாமிகள். திருக்காளத்தி, பண்—நட்டராகம்.

மறிசேர்கையினனேமதமாவுரிபோர்த்தவனே
குறியேயென்னுடையகுருவேயுன்குற்றேவல்செய்வேன்
நெறியேநின்றடியார்நினைக்குந்திருக்காளத்தியுள்
அறிவேயுன்னையல்லாலறிந்தேத்தமாட்டேனே. (67)

எழுந்துகும்பிட

திருஞான. திருவாவூர்ப்பசுபதீச்சரம். பண்-நட்டபாடை

குற்றமறுத்தார் குணத்திலுள்ளார் கும்பிடுவார் தமக்கன்பு செய்வார், ஒற்றைவிடையினர் நெற்றிக்கண்ணா ருறைபதி யாகுஞ்செறிகொண்மாடம், சுற்றியவாசலின்மாதர்விழாச் சொற்கவிபாட நிதானநல்கப், பற்றியகையினர் வாழுமாவூர்ப் பசுபதீச்சரம்பாடு நாவே. (68)

பிரதக்ஷிணம்.

திருநா. திருவாரூர். திருத்தாண்டகம்.

மதிதருவனெஞ்சமேயுய்ஞ்சுபோக
வழியாவதிதுகண்டாய்வானோர்க்கெல்லாம்
அதிபதியேயாரமுதேயாதீயென்று
மம்மானேயாரூரெம்மையாவென்றும்
துதிசெய்துதுன்றுமலர்கொண்டுதூவிச்
சூழும்வலஞ்செய்துதொண்டுபாடிக்
கதிர்மதிசேர்சென்னியனேகாலகாலா
கற்பகமேயென்றெண்றேகதறுநில்லே. (69)

கூத்தாட

ஷ சுவாமிகள் கோயில் திருநேரிசை.

பார்த்திருந்தடியனேனுன்பரவுவன்பாடியாடி
மூர்த்தியேயென்பனுன்னைமூவரின்முதல்வனென்பன்
ஏத்துவாரிடர்கடீர்ப்பாய்தில்லைச்சிற்றம்பலத்துக்
கூத்தாவுன்கூத்துக்காண்பான்கூடநான்வந்தவாறே. (70)

தண்டம்பண்ணுமுன் செய்யுந்துதி.

சுந்தா, திருப்புன் கூர். பண்-தக்கேசி.

அந்தணாளனுன்னடைக்கலம்புகுத
வவனைக்காப்பதுகாரணமாக
வந்தகாலன் றனுருயி ரதனை
வவ்வினாய்க் குன்றன் வண்மைகண் டடியேன்

எந்தைநீ யெனைநமன் றமர்நலியி
　　லிவன்மற் றென்னடியா னெனவிலக்கும்
சிந்தையால் வந்துன் றிருவடி யடைந்தேன்
　　செழும் பொழிற் றிருப்புன் கூருளானே. (71)

நற்றமிழ் வல்ல ஞானசம்பந்த
　　னவினுக் கரையனுளைப் போவானும்
கற்றகுதனற் சாக்கியன் சிலந்தி
　　கண்ணப்பன் கணம்புல்ல னென்றிவர்கள்
குற்றஞ் செய்யினுங் குணமெனக் கருதுங்
　　கொள்கை கண்டுநின் குரைகழ லடைந்தேன்
பொற்றிரண் மணிக்கமலங் கண்மலரும்
　　பொய்கைசூழ் திருப்புன் கூருளானே. (72)

இயக்கர் கின்னரர் யமனொடு வருண
　　ரியங்குதீவளி ஞாயிறு திங்கள்
மயக்கமில் புலிவானர நாகம்
　　வசுக்கள் வானவர் தானவரெல்லாம்
அயர்ப்பொன் றின்றிநின் றிருவடியதனை
　　யர்ச்சித்தார் பெறுமார ருள்கண்டு
திகைப்பொன் றின்றிநின் றிருவடி யடைந்தேன்
　　செழும்பொழிற் றிருப்புன் கூருளானே. (73)

தண்டம்பண்ண

திருநா. தனித்திருநேரிசை.

அங்கத்தை மண்ணுக்காக்கி யார்வத்தை யுனக்கேதந்து
பங்கத்தைப் போகமாற்றிப் பாவித்தேன் பரமாநின்னைச்
சங்கொத்த மேனிச்செல்வா சாதனு ளுயேனுன்னை
எங்குற்று யென்றபோதா லிங்குற்றே னென்கண்டாயே. (74)

ஷெ சுவாமிகள் திருக்கடம்பூர் குறுந்தொகை

நன்கடம்பனைப் பெற்றவள் பங்கினன்
தென்கடம்பைத் திருக்கரக் கோயிலான்
தன்கடன் னடியேனையுந் தாங்குதல்
என்கடன் பணிசெய்து கிடப்பதே. (75)

ஷை சுவாமிகள் தனித்திருக் குறுந்தொகை

வாழ்த்த வாயுநினைக்க மடநெஞ்சுந்
தாழ்த்தச் சென்னியுந் தந்ததலைவனைச்
சூழ்த்த மாமலர் தூவித் துதியாதே
வீழ்த்தவா வினையே னெடுங்காலமே. (76)

ஷை சுவாமிகள் திருமருகல் குறுந்தொகை

பெருகலாந்தவம் பேதைமை தீரலாம்
திருகலாகிய சிந்தை திருத்தலாம்
பருகலாம் பரமாயதோ ரானந்தம்
மருகலானடி வாழ்த்தி வணங்கவே. (77)

தேவார்ந்த தேவனைத் தேவரெல்லாந்
திருவடிமே லலரிட்டுத் தேடிநின்று
நாவார்ந்த மறைபாடி நட்டமாடி
நான்முகனு மிந்திரனு மாலும் போற்றக்
காவார்ந்த பொழிற்சோலைக் கானப்பேராய்
கழுக்குன்றத் துச்சியாய் கடவுளேநின்
பூவார்ந்த பொன்னடிக்கே போதுகின்றேன்
பூம்புகலூர் மேவிய புண்ணியனே. (78)

எழுந்து தோத்திரம் பண்ண

மேற்படி சுவாமிகள், திருக்கடம்பூர். குறுந்தொகை

பொய் தொழாது புலியுரி யோன்பணி
செய்தெழா வெழுவார் பணிசெய் தெழா
வைதெழா தெழுவா ரவ்ரெள்கநீர்
கைதொழா வெழுமின் கரக்கோயிலே. (79)

மேற்படி சுவாமிகள் தனித்திருத் தாண்டகம்

அப்பனீ யம்மைநீ யையனுநீ
யன்புடைய மாமனு மாமியுநீ
ஒப்புடைய மாதருமொண் பொருளுநீ
யொருகுலமுஞ் சுற்றமு மோரூருநீ
துய்ப்பனவு முய்ப்பனவுந் தோற்றுவாய் நீ
துணையாயென்னெஞ்சந் துறப்பிப்பாய் நீ

இப்பொன்னீயிம்மணிநீயிம்முத்துநீ
யிறைவனீயேறூர்ந்தசெல்வனீயே (80)

குலம்பொல்லேன்குணம்பொல்லேன்குறியும்பொல்லேன்
குற்றமேபெரி துடையேன் கோலமாய
நலம்பொல்லேனான்பொல்லேன் ஞானியல்லே
னல்லாரோடிசைந்திலேனடுவேநின்ற
விலங்கல்லேன்விலங்கலாதொழிந்தேனல்லேன்
வெறுப்பனவுமிகப்பெரிதும்பேசவல்லேன்
இலம்பொல்லேனிரப்பதல்லாலீயமாட்டே
னென்செய்வான்றோன்றினேனேழையேனே (81)

ஷ. சுவாமிகள். திருவாவடுதுறை, திருத்தாண்டகம்

திருவேயென்செல்வமேதேனேவானோர்
செழுஞ்சுடரே செழுஞ்சுடர் நற்சோதிமிக்க
உருவேயென்னுறவேயென்னூனேயூனி
னுள்ளமேயுள்ளத்தினுள்ளேநின்ற
கருவேயென் கற்பகமே கண்ணே கண்ணிற்
கருமணியே மணியாடுபாவாய் காவாய்
அருவாயவல்வினைநோயடையாவண்ண
மாவடுதண்டுறையுறையுமமரரேறே. (82)

ஷ. சுவாமிகள், திருவாரூர் திருத்தாண்டகம்.

ஆடுவாய்நீநட்டமளவிற்குன்றா
வவியடுவாரருமறையோரறிந்தேனுன்னைப்
பாடுவார்தும்புருவுநாரதாதி
பரவுவாரமரர்களுமமரர்கோனும்
தேடுவார் திருமாலு நான் முகனுந்
தீண்டுவார்மலைமகளுங்கங்கையாளும்
கூடுமோநாயடியேன்செய்குற்றேவல்
குறையுண்டோ திருவாரூர் குடிகொண்டீர்க்கே. (83)

மேற்படி சுவாமிகள். போற்றித்திருத்தாண்டகம்.

சங்கரனே நின்பாதம் போற்றி போற்றி
சதாசிவனே நின்பாதம் போற்றி போற்றி
பொங்கரவா நின்பாதம் போற்றி போற்றி
புண்ணியனே நின்பாதம் போற்றி போற்றி

அங்கமலத் தயனேடு மாலுங்காண
வனலுருவா நின்பாதம் போற்றி போற்றி
செங்கமலத் திருப்பாதம் போற்றி போற்றி
திருமூலட்டானனே போற்றி போற்றி. (84)

தி நா திருக்கடவூர் வீரட்டானம்; திருநேரிசை.

பழியுடையாக்கைதன்னிற்பாழுக்கேநீரிறைத்து
வழியிடைவாழமாட்டேன்மாயமுந்தெளியகில்லேன்
அழிவுடைத்தாயவாழ்க்கை யைவரால‌லைக்கப்பட்டுக்
கழியிடைத்தோணிபோன்றேன் கடவூர்வீரட்டனாரே. (85)

திருநா. திருவதிகைவீரட்டம் திருநேரிசை.

நீதியால்வாழமாட்டேனித்தலுந் தூயேனல்லேன்
ஓதியுமுணரமாட்டே னுன்னையுள்வைக்கமாட்டேன்
சோதியேசுடரேயுன்றன் றாமலர்ப்பாதங்காண்பான்
ஆதியேயலந்துபோனேனதிகைவீரட்டனாரே. (86)

கழித்திலேன் காமவெங்நோய்காதன்மையென்னும்பாசம்
ஒழித்திலேனூன்கணோக்கியுணர்வெனுமிமைதிறந்து
விழித்திலேன்வெளிறுதோன்றவினையெனுஞ்சரக்குக்கொண்
[டே
னழித்திலேனயர்த்துப்போனேனதிகைவீரட்டனாரே. (87)

ஷை சுவாமிகள். திருக்கோடிகா. திருநேரிசை.

கேழல்வெண்கொம்புபூண்டகிளரொளிமார்பினனே
ஏழையேனேழையேனானென்செய்கேனெந்தைபெம்மான்
மாழையொண் கண்ணினார்கள்வலைதனின்மயங்குகின்றேன்
கூழையேறுடையசெல்வாகோடிகாவுடையகோவே. (88)

ஷை சுவாமிகள். தனித்திருநேரிசை.

தொண்டனேன்பிறந்துவாளாதொல்வினைக்குழியில்வீழ்ந்து
பிண்டமேசுமந்துநாளும்பெரியதோரவாவிற்பட்டேன்
அண்டனேயமரர்கோவேயறிவனேயஞ்சலென்னாய்
தெண்டிரைக்கங்கைசூடுந்திகழ்தருசடையினானே. (89)

திருநா. கோயில் திருவிருத்தம்.

படைக்கலமாகவுன்னுமத்தெழுத்தஞ்செனுவிற்கொண்டேன்
இடைக்கலமல்லேனெழுபிறப்புமுனக்காட்செய்கின்றேன்
துடைக்கினும்போகேன்ருெழுதுவணங்கித்தூநீறணிந்துன்
அடைக்கலங்கண்டாயணிதில்லைச்சிற்றம்பலத்தரனே. (90)

ஷ சுவாமிகள் திருப்பாதிரிப்புலியூர் திருவிருத்தம்

புழுவாய்ப்பிறக்கினும்புண்ணியா வுன்னடியென்மனத்தே
வழுவா திருக்கவரந்தரவேண்டுமிவ்வையகத்தே
தொழுவார்க்கிரங்கியிருந்தருள்செய்பாதிரிப்புலியூர்ச்
செழுநீர்ப்புனற்கங்கைசெஞ்சடைமேல்வைத்தீவண்ண
[னே (91)

சுந்தா. திருவாவடுதுறை. பண்–தக்கேசி.

ஒப்பிலாமுலையாளொருபாகாவுத்தமாமத்தமார்தருசடையாய்
முப்புரங்களைத்தீவளைத்தங்கேமூவருக்கருள்செய்யவல்லானே
செப்பவானிழற்கீழிருந்தருளுஞ்செல்வனேதிருவாவடுதுறை
[யுள்
அப்பனேயென்னையஞ்சலென்றருளாயாரெனக்குறவமரர்
களேறே (92)

குறைவிலா நிறைவே குணக்குன்றே கூத்தனே குழைக்கா துடையானே, உறவிலேனுனையன்றி மற்றடியேனொரு பிழை பொறுத்தாலிழிவுண்டோ, சிறைவண்டார் பொழில்சூழ் திருவாரூர்ச் செம்பொனே திருவாவடு துறையுள் அறவனேயென்னை யஞ்சலென்றரு ளாயாரெனக் குறவ மரர்களேறே. (93)

சுந்தா. திருவிடைமருதூர். பண்–தக்கேசி

கொடுக்ககிற்றி லேனொண் பொருடன்னைக் குற்றஞ் செற்ற மிவை முதலாக. விடுக்ககிற்றிலேன் வேட்கையுஞ் சினமும் வேண்டிலும் புலனைன்வசமல்ல. நடுக்கமுற்றதோர் மூப்புவந் தெய்த நமன்றமர் நரகத்திடலஞ்சி. இடுக்கணுற்றனனுய் வகையருளாயிடைமருதுறை யெந்தைபிரானே. (94)

சுந்தர. திருமழபாடி. பண்–நட்டராகம்.

பொன்னார் மேனியனே புலித்தோலையரைக் கசைத்து
மின்னார் செஞ்சடை மேல்மிளிர் கொன்றையணிந்தவனே
மன்னே மாமணியேமழபாடியுண் மாணிக்கமே
அன்னேயுன்னையல்லாலினியாரைநினைக்கேனே. (95)

ஷை சுவாமிகள் திருக்கடவூர்வீரட்டம். பண்–நட்டராகம்.

மண்ணீர் தீவெளிகால்வருபூதங்களாகிமற்றும்
பெண்ணோடாணலியாய்ப்பிறவாவுருவானவனே
கண்ணாருண்மணியேகடவூர்தனுள்வீரட்டத்தெம்
அண்ணாவென்னமுதேயெனக்கார் துணைநீயலதே. (96)

திருவாசகம்.

திருச்சதகம்.

விச்சதின்றியே விளைவு செய்குவாய்
விண்ணு மண்ணக முழுதும் யாவையும்
வைச்சுவாங்கு வாய்வஞ்சகப் பெரும்
புலையனேனையுன் கோயில் வாயிலில்
பிச்சனாக்கினாய் பெரியவன் பருக்
குரியனாக்கினாய் தாம் வளர்த்ததோர்
நச்சுமாமரமாயினுங் கொலார்
நானுமங்ஙனே யுடையநாதனே. (97)

அடைக்கலப்பத்து

மாவடுவ கிரன்ன கண்ணிபங் காநின் மலரடிக்கே
கூவிடுவாய் கும்பிக்கே யிடுவாய்நின் குறிப்பறியேன்
பாவிடை யாடுகுழல் போற்கரந்து பரந்ததுள்ளம்
ஆகெடுவே னுடையா யடியேனுன் னடைக்கலமே. (98)

குழைத்தபத்து

அன்றேயென் றனுவியுமுடலு முடைமை யெல்லாமுங் [யோ
குன்றேயனையா யென்னையாட் கொண்டபோதே கொண்டிலை
இன்றோரிடை யூறெனக்குண்டோவெண்டோண்முக்கணெம் [மானே
நன்றேசெய்வாய் பிழைசெய்வாய் நானோவிதற்குநாயகமே. (99)

திருவிசைப்பா

இடர்கெடுத்தென்னை யாண்டுகொண்டென்னுள்
இருடபிழம்பற வெறிந்தெழுந்த
சுடர்மணி விளக்கினுள்ளொளி விளங்குந்
தூயநற்சோதியுட் சோதீ
அடல்விடைப்பாகா வம்பலக்கூத்தா
அயனெடுமாலறியாமைப்
படரொளி பரப்பிப் பரந்து நின்றாயைத்
தொண்டனேன் பணியுமா பணியே (100)

சேந்தனர் திருப்பல்லாண்டு

பாலுக்குப் பாலகன் வேண்டியழுதிடப் பாற்கடலீந்த பிரான்
மாலுக்குச் சக்கரமன்றருள்செய்தவன் மன்னியதில்லை தன்னுள்
ஆலிக்கு மந்தணர்வாழ்கின்ற சிற்றம்பலமே யிடமாகப்
பாலித்துநட்டம் பயிலவல்லானுக்கே பல்லாண்டு
கூறுதுமே. (101)

பெரியபுராணம்

உலகெலா முணர்ந் தோதற் கரியவன்
நிலவு லாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதிய னம்பலத் தாடுவான்
மலர்சிலம்படி வாழ்த்தி வணங்கு வாம். [102]

மறவாமை யானமைத்த மனக்கோயி லுள்ளிருத்தி
உறவாதி தனையுணரு மொளிவிளக்குச் சுடரேற்றி
இறவாத வானந்தமெனுந் திருமஞ்சன மாட்டி
அறவாணர்க் கன்பென்னு மமுதமைத்தர்ச்சனை
செய்வார். (103)

இறவாதவின்ப வன்புவேண்டிப் பின்வேண்டு கின்றார்
பிறவாமைவேண்டு மீண்டும் பிறப்புண்டே லுன்னையென்று
மறவாமை வேண்டுமின்னும் வேண்டுநான் மகிழ்ந்துபாடி
யறவாநீ யாடும்போ துன்னடியின் கீழிருக்கவென்றார், (104)

கோயிற்புராணம்

தற்பரமாய்ப் பரபதமாயத் தாவிலனு பூதியதாய்
அற்புதமா யாரமுதா யானந்த நிலையவொளிப்
பொற்பினதாய்ப் பிரிவிலதாய்ப் பொருளாகி யருளாகுஞ்
சிற்பரமா மம்பரமாந் திருச்சிற்றம் பலம்போற்றி. (105)

திருக்கோவையார்

நேயத்ததாய் நென்னலென்னைப் புணர்ந்துநெஞ்சநெகப்போய்
ஆயத்ததா யமிழ்தா யணங்காயர னம்பலம்போல்
தேயத்ததா யென்றன் சிந்தையதாய்த் தெரியிற்பெரிது
பாயத்த தாகியிதோ வந்துநின்ற தென்மன்னுயிரே (106)

ஓமம்

திருநா. திருக்கடம்பந்துறை திருக்குறுந்தொகை

பூமென் கோதை யுமையொரு பாகனை
யோமஞ் செய்துமுணர் மின்களுள் ளத்தாற்
காமற்காய்ந்த பிரான் கடம்பந் துறை
நாம மேத்த நந்தீவினை நாசமே; (107)

பெட்டகக் கோயிலில் எழுந்தருளப்பண்ண

ஷ சுவாமிகள் திருக்கச்சியேகம்பம் பண்-காந்தாரம்

கைப்போது மலர்தூவிக் காதலித்து வானோர்கள்
முப்போது முடிசாய்த்துத் தொழநின்ற முதல்வனை
அப்போதுமலர் தூவியைம்புலனுமகத்தடக்கி
எப்போதுமினியானையென் மனத்தேவைத்தேனே. (108)

திருஞா. திருமறைக்காடு. பண்—இந்தளம்.

சதுரம் மறைதான்றுதி செய்து வணங்கும்
மதுரம் பொழில்சூழ் மறைக்காடுறை மைந்தா
இதுநன் கிறைவைத் தருள் செய்கவெனக்குன்
கதவந்திருக்காப்புக்கொள்ளுங்கருத்தாலே. (109)

திருஞான. திருக்குடவாயில் பண்—காந்தாரம்

அடியார்ந்தபைங்கழலுஞ்சிலம்புமார்ப்பவங்கையிற்
செடியார்ந்தவெண்டலையொன்றேந்தியுலகம்பலிதேர்வீர்
குடியார்ந்தமாமறையோர்குலாவியேத்துங்குடவாயில்
படியார்ந்தகோயிலேகோயிலாகப்பயின்றீரே. (110)

சண்டேசுர பூசை.

சுவாமிகள். திருக்குறுக்கை. திருநேரிசை-

தழைத்ததோராத்தியின்கீழ்த்தாபரமணலாற்கூப்பி
அழைத்தங்கேயாவின்பாலைக்கறந்துகொண்டாட்டக்கண்டு
பிழைத்ததன்றாதைதாளைப்பெருங்கொடுமழுவால்வீசக்
குழைத்ததோரமுதமீந்தார்குறுக்கைவீரட்டனாரே (111)

வெண்பா.

நீலகண்டன்பங்கயத்தானேசமயமுள்ளிருத்தும்
பாலனேஞானப்பரஞ்சுடரே—ஆலமுண்டான்
வண்டாரணிபுயனேவள்ளலைப்பூசித்தபயன்
சண்டேசனேபணிந்தேன்று (112)

திருவெண்காட்டடிகள். (பிராயச்சித்தார்த்தம்.)

கல்லாப்பிழையுங்கருதாப்பிழையுங்கசிந்துருகி
நில்லாப்பிழையுநினையாப்பிழையுநின்னஞ்செழுத்தைச்
சொல்லாப்பிழையுந்துதியாப்பிழையுந்தொழாப்பிழையும்
எல்லாப்பிழையும்பொறுத்தருள்வாய்கச்சியேகம்பனே. (113)

பின்பு பிராயச் சித்தார்த்தம் அகோரமந்திரஞ் ஜபித்து இயன்ற மட்டும் தோத்திரம் பண்ணுக.

சிவபூசைத் திரட்டு முற்றும்.

குறிப்பு:– [இந்நூல் யாழ்ப்பாணம் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலரவர்கள் வைத்திருந்த ஏட்டின்படி அச்சிட்டதாக யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபையார் 1920ல் வெளியிட்டுள்ளனர். இப்பதிப்பில் 15, 78ஙிர் பாட்டுகள் புதிதாகச் சேர்க்கப்பட்டுள என 100ஙிர் பாட்டு, முன் 'உண்டதே உண்டு" என்றிருந்த பட்டினத்தார் பாடலுக்குப் பதில் 'இடர் கெடுத்தென்னை" என்ற திருவிசைப்பா பாட்டு அச்சிடப்பட்டது.]

பிழை திருத்தம்

பக்கம்.	வரி.	பிழை	திருத்தம்.
2	9	எப்பொழுதும	எப்பொழுதும்
4	7	தேதிகரவர்களுக்கும்	தேசிகரவர்களுக்கும்
15	8	செள்று	சென்று
,,	17	திருக்காளப்பேர்	திருக்கானப்பேர்
20	26	எலவார்	ஏலவார்
29	30	ரிடையூரெனக்	ரிடையூறெனக்

உ

சிவமயம்

மதுரைச் சைவ சித்தாந்த சபை நோக்கங்கள்

இச் சபையின் தலையாய நோக்கமாவது சைவ சித்தாந்த சமயத்தையும் அதன் தத்துவ சாத்திர முடிபுகளையும் பரவச் செய்தலேயாம். இக் கருத்து வளருமாறு இச்சபை செய்து வருவன.

1. வாரந்தோறும் ஞாயிற்றுக்கிழமை சமயப் பயிற்சி வகுப்பும், சொற்பொழிவும் நடைபெறுகின்றன.
2. ஆண்டுக்கொரு முறை ஒரு மகாநாடு நடத்துதல்.
3. புத்தகங்கள், துண்டுப் பிரசுரங்கள் முதலிய வெளியீடுகளை இயற்றிச் சைவ சித்தாந்தக் கொள்கைகளையும் அவற்றிற்கு ஆதரவு புரியும் ஏனைய கருத்துக்களையும் பரவச் செய்தல்.
4. சைவ சித்தாந்தக் கொள்கைகளையும் ஏனைய சமயக் கொள்கைகளையும் அறியக்கூடிய புத்தகங்கள் முதலிய வெளியீடுகளைச் சேகரித்து "ஸ்ரீ சிவஞான முனிவர் புத்தகசாலை" எனப் பெயரிய நூல் நிலையம் ஏற்படுத்தப்பட்டிருக்கிறது.
5. புறச் சமயத்தினின்றும் சைவ சமயம் புக விழைவார்க்கு தக்க வசதிகள் ஏற்படுத்திச் சைவ சமயத்தில் சேர்த்துக் கொள்ளுதல்
6. மக்கள் சமயம் முதலிய சிவதீட்சைகளைப் பெற்றுச் சிவபூசை செய்யும்படி செய்வித்தல்

சைவ சமய மாண்பை உணர முதலில் படித்துணர வேண்டிய நூல்கள். இதனைக் கண்ணுறும் ஒவ்வொருவரும் கீழ்க்கண்ட நூல்களை வாங்கியும், நண்பர்களை வாங்கும்படி செய்தும் சைவ சித்தாந்த சபைகள் ஏற்படுத்தி அதன் மூலம் போதிக்கும்படி செய்தலும் சைவ சமய வளர்ச்சிக்குப் பயன்தரும்.

		விலை
1	சைவ வினு விடை IIவது	0—75
2	சைவ பூஷண சந்திரிகை (விபூதி உருத்திராக்ஷம் பற்றிய முழு விபரம் உள்ளது)	0—50
3	நான்காம் பால பாடம்	1—50
4	சைவ சமய சாரம்	0—40
5	சைவ சமய நெறியுரை (இதில் ஆசாரிய இலக்கணம், சீடர் இலக்கணம், பொது இலக்கணம் முதலிய அரிய விஷயங்கள் அடங்கியது)	1—75
6	பெரிய புராண சூசனம்	0—75
7	சைவ தூஷண பரிகாரம்	0—50
8	சிவ சங்கர பண்டிதர் பிரபந்தத் திரட்டு	1—00
9	சிவக்ஷேத்திராலய மகோத்ஸவ உண்மை விளக்கம்	0—75
10	மகோற்சவ விளக்கம்	0—75
11	சிவஞானத் தெளிவுபதேசத்திரயம்	0—60
12	சமயாசாரியர் சந்தானுசாரியர் சரித்திர சங்ரகம் நால்வர் நான்மணி மாலை	0—50
13	ஆறுமுக நாவலர் சரித்திரம் உரை நடை	1—50

இதன்பின் விரிந்த நூல்கள் படித்தற்குரியது.

கிடைக்குமிடம் :-

ஸ்ரீலஸ்ரீ ஆறுமுக நாவலரவர்கள் அச்சகம்,

300, தங்கசாலைத் தெரு, சென்னை-1.

விஜயா, மதுரை-66.